# சுவிசேஷம் பிரசங்கித்து சீஷராக்குவது எப்படி

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு ! இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இதற்கு முந்தைய **"சீஷராக்குங்கள்"** என்ற வேதபாடத்தில், சீஷராக்குவதன் முக்கியத்துவம், சீஷராக்குவதற்கு விசுவாசிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரம், கிறிஸ்தவனுக்கும் சீஷனுக்கும் உள்ள வேறுபாடு போன்ற காரியங்களை பார்த்தோம். இப்போது தொடர்ந்து, சுவிசேஷம் பிரசங்கிப்பதன் முக்கியத்துவம், எப்படி சுவிசேஷம் பிரசங்கிப்பது?, எப்படி ஒருவரை இரட்சிப்புக்குள் வழிநடத்துவது? போன்றவற்றை பார்ப்போம்.

தன்னுடைய சீஷர்கள் ஆகப்போகிறவர்களுக்கு இயேசு கொடுத்த முதல் கட்டளைகளில் ஒன்று,
*மாற் 1:17 இயேசு அவர்களை நோக்கி: என்பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்.*

இயேசு அவர்களுக்கு கொடுத்த கடைசி கட்டளைகளில் ஒன்று:
*மத் 28:19 ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் **சீஷராக்கி,** பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, 20 நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.*

இயேசு இந்த உலகத்தில் இருந்த போதும் இதுவே அவரது நோக்கமாக இருந்தது.

*மாற் 1:38 அவர்களை அவர் நோக்கி: அடுத்த ஊர்களிலும் நான் பிரசங்கம்பண்ண வேண்டுமாதலால், அவ்விடங்களுக்குப் போவோம் வாருங்கள்; இதற்காகவே புறப்பட்டுவந்தேன் என்று சொல்லி;*

உயிர்த்தெழுந்த இயேசு இந்த பூமியை விட்டு செல்வதற்கு முன்பாக கொடுத்த கடைசி கட்டளைகளை எல்லாம் சேர்த்து பார்த்து, அவைகளை ஒரே வாக்கியத்தில் ஆக்கினால், அதன் அர்த்தம் இவ்வாறாக இருக்கும் **"சுவிசேஷம் பிரசங்கித்து சீஷராக்குங்கள்"**

*மத் 28:19,20, மாற் 16:15 பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். 16 விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.*

*லூக் 24:46 எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; 47 அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது.*

*யோவா 20:21 இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக; பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி, 22 அவர்கள்மேல் ஊதி: பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள், 23 எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும், எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும் என்றார்.*

*அப் 1:8 பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.*

## சுவிசேஷம்.

**வைன்ஸ் வேதாகம சொல் அகராதி;** சுவிசேஷம் என்ற வார்த்தைக்கான கிரேக்க வார்த்தை "இவாஞ்சலியோன்". இதன் அர்த்தம் "நற்செய்தி". இதன் ஆங்கில வார்த்தை "காஸ்பல்". இதன் அர்த்தம் 'நல்ல தகவல்'. புதிய ஏற்பாட்டில் இவ்வார்த்தை **"பரலோக ராஜ்யத்தின் நற்செய்திகளையும், இயேசுவின் பிராயசித்த மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் இவற்றின் அடிப்படையில் விசுவாசத்தால் பெற்றுக்கொள்கிறதும் இயேசுவின் மூலமாக கிடைக்கிறதுமான இரட்சிப்பின் நற்செய்திகளையும்"** குறிக்கிறது. *( அப் 15;7; 20:24; 1 பேதுரு 4:17 ).*

பவுல் அப்போஸ்தலன், கீழ்க்காணும் வசனங்களில் தெளிவாக எது சுவிசேஷம் என்று எழுதுகிறார்.

*1கொரி 15:1 அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள்.*
*2 நான் உங்களுக்குப் பிரசங்கித்தபிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே.*
*3 நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து,*
*4 அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து,*

நாம் விசுவாச உலகத்தில் உபயோகிக்கும் பல வார்த்தைகளுக்கும் வேதாகமத்தில் ஆழ்ந்த அர்த்தங்கள் இருக்கின்றன. உதாரணத்துக்கு, நாம் வழக்கமாக உபயோகிக்கிற, இரட்சிப்பு, ஞானஸ்நானம், அபிஷேகம், மீட்பு, பாவமன்னிப்பு, நீதிகரணம், ஒப்புரவு, பாவம், விடுதலை, ஆத்துமா, போன்ற பல வார்த்தைகளுக்கு மிக

ஆழமான அர்த்தங்கள் இருக்கின்றன. அவற்றை அறிந்து கொள்வது நல்லது. இப்போது **சுவிசேஷம் என்றால் என்ன** என்று சற்று பார்ப்போம்.

ஒரு மனிதர் இருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் குடிப்பழக்கத்தில், திருடுகிறவராக, சிகரெட்பிடிப்பவராக, நோயில், வறுமையில், துன்பத்தில், துயரத்தில், பணக்கஷ்டத்தில், ஒரு வழக்கில் மாட்டிக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவருக்கு உடலில் சில பெரிய புண்கள் இருக்கின்றன. இவரை ஒரு ஊழியக்காரர் சந்திக்கிறார். அவருக்கு இயேசுவின் மகத்துவம், அவர் செய்த அற்புதங்களை பற்றி சொல்கிறார். அவரது புண்களை தினமும் கழுகி பின் அவருக்காக ஜெபிக்கிறார். அவரது நோய் குணமடைந்து விட்டது. பின் அவருக்கு குடி, திருட்டு, சிகரெட் இவற்றை விட வேண்டியதன் அவசியத்தை அன்பாக விளக்குகிறார். அவரும் அதைக்கேட்டு அப்பழக்கங்களை விட்டுவிடுகிறார். பின் ஊழியக்காரர் அவருக்காக ஜெபிக்கிறார், அவரது வழக்கில் இருந்து அற்புதமாக விடுவிக்கப்படுகிறார். பின் ஊழியக்காரர் அவருக்கு ஒரு வங்கியில் இருந்து கடன் வாங்கி கொடுக்கிறார், அதை வைத்து அவர் தன் கடன்களை எல்லாம் அடைத்து ஒரு சிறு தொழில் தொடங்கி நல்லபடியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். இப்போது இந்த மனிதரின் வாழ்வில் இந்த ஊழியக்காரர் செய்ததை எல்லாம் நாம் அன்பாக **"சுவிசேஷ வேலை"** என்று சொல்வதுண்டு. இவைகள் அனைத்தும் செய்யப்படவேண்டும். ஆனால் ஒரு வேளை இப்படிப்பட்ட நிலையில் இருந்து கொண்டு அந்த மனிதர் மரித்துப்போனால், அவர் பரலோகம் செல்வாரா? நரகத்துக்கு செல்வாரா? இதற்கு வேதாகமத்தின் அடிப்படையில் நாம் சொல்ல வேண்டிய பதில், "அவர் ரட்சிக்கப்பட்டிருந்தால் ( மறுபடியும் பிறந்திருந்தால் ) பரலோகம் செல்லுவார், அப்படி ரட்சிக்கப்படாவிட்டால் நிச்சயமாக நரகத்துக்குதான் செல்லுவார் ***( மாற்கு 16;16, யோவான் 3:3, 18, 36. ரோமர் 3:23, 1 தெச;1;9 ).*** அப்படி அம்மனிதர் நரகத்துக்குத்தான் செல்லப்போகிறார் என்றால் நாம் செய்த சுவிசேஷ வேலைகளுக்கு எல்லாம் என்ன பயன்?

இதை சரியாக அறிந்து கொள்ள நீங்கள் விரும்பினால் முதலில் **"சுவிசேஷம் - Gospel"** என்ற வார்த்தைக்கான சரியான அர்த்தத்தை படித்துக்கொள்ள வேண்டும். நீங்கள் விரும்பினால் எமது **"கிறிஸ்துவின் சுவிசேஷமும், மற்றொரு சுவிசேஷமும்"** என்ற வேத பாடத்தை படிக்கவும். தற்போது சற்று சுருக்கமாக பார்ப்போம். நாம் பொதுவாக உபயோகிக்கிற "சுவிசேஷ வேலை" என்ற வார்த்தை வேதாகமத்தில் (KJV) உபயோகிக்கப்படவில்லை. இந்த வார்த்தைக்கான அர்த்தத்தை பார்க்கும்போது இதை நாம், "சுவிசேஷம் பிரசங்கிக்கிற வேலை", "சுவிசேஷம் பிரசங்கிப்பதற்காக செய்யப்பட்ட வேலை", "சுவிசேஷம் பிரசங்கிப்பது சம்பந்தப்பட்ட வேலை" என்ற பலவிதமான அர்த்தத்தில் எடுக்கலாம். பொதுவாக நாம் இதை எடுத்துக்கொள்வது - "இயேசு மற்றவர்களுக்கு செய்யச்சொன்ன எல்லா நல்ல உதவிகளும்" என்ற அர்த்தத்தில். ஆனால் வேதாகமத்தை பார்க்கும்போது, 'ராஜ்யத்தின் சுவிசேஷம் ***( மத் 4:23, 9:35 ),*** தேவனுடைய கிருபையின் சுவிசேஷம் ***( அப் 20:24 ),*** என் (பவுலின் )சுவிசேஷம் ***( ரோமர் 2:16 ),*** கிறிஸ்துவின் சுவிசேஷம் ***( 1 கொரி 9:12, 2 கொரி 2:12, ரோமர் 15:19, 15:29,***) வேறொரு சுவிசேஷம் ***( 2 கொரி 11:4 )*** என்று பல விதங்களில் இந்த வார்த்தை குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே இந்த வேதபாடத்தில் "சுவிசேஷம் பிரசங்கித்து சீஷராக்குங்கள்" என்ற வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "சுவிசேஷம்" என்ற வார்த்தைக்கு, நாம் "இயேசுவின் சுவிசேஷம், அல்லது 'இரட்சிப்பின் சுவிசேஷம்' அல்லது 'பரலோக ராஜ்யத்தின் சுவிசேஷம்' என்று அர்த்தம் எடுத்துக்கொள்வோம். ***சுருக்கமாக சொல்லப்போனால் அப். பவுல் 1 கொரி 15:1 - 4 வசனங்களில் சொல்லியிருப்பது போல "கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, 4 அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து," என்ற சுவிசேஷத்தை*** **( நற்செய்தியை ) மற்றவர்களுக்கு சொல்லிக்கொடுத்து அவர்களை ரட்சிப்புக்குள் ( மறுபடியும் பிறப்பு ) நடத்துவது.**

ஒரு மனிதன் எப்படி இரட்சிக்கப்பட வேண்டும் என்று **வேதாகமம் சொல்லுகிறது** என்று பார்ப்போம். முதலில், நீங்கள் வேதாகமம் சொல்லுகிற படி இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா? என்று உங்களை நீங்களே சோதித்துக்கொள்ளுங்கள். அப்படி இல்லை என்றால் தயவாக, வேத வசனங்களின் அடிப்படையில் உங்களது இரட்சிப்பை உறுதி செய்து கொள்ளுங்கள். தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் *(மாற்கு 16:15).* பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்ளுங்கள் *( அப் 1:8 ).* வேதாகம அறிவை வளர்த்துக்கொள்ளுங்கள் *( 2 தீமோ 3:16 ).* அதன்பின் இந்த இரட்சிப்பை வேதவசனங்களின் அடிப்படையில் மற்றவர்களுக்கு சொல்லிக்கொடுங்கள்.

*1பேது 1:23 அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான* ***தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே.***

*யாக் 1:18 அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச்* ***சத்திய வசனத்தினாலே ஜநிப்பித்தார்.***

*எபே 1:13 நீங்களும் உங்கள்* ***இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது,*** *வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்.*

*யோவா 20:31 இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே* ***நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.***

மனிதனாகப் பிறக்கின்ற எவரும் பாவியாக, பாவ சுபாவத்தோடேயே பிறக்கின்றனர். பின் அவர் வேத

வசனங்களை கேட்டு இரட்சிக்கப்படுகிறார். இப்படித்தான் ஒரு மனிதர் இரட்சிக்கப்பட வேண்டும். இயற்கையாக ஒருவர் பிறப்பதற்கு எப்படி ஒரு மனிதனின் வித்து தேவைப்படுகிறதோ, அப்படியே ஒருவர் ஆவிக்குரிய மனிதனாக மறுபடியும் பிறப்பதற்கு **வேதவசனம்** என்னும் வித்து தேவைப்படுகிறது. இதற்காக ஒரு மனிதர் வேத வசனங்களை கேட்க வேண்டும். வேத வசனங்கள் "ஆவியாயிருக்கிறது" ***( யோவான் 6:63). யோவான் 3:6*** ல், மறுபடியும் பிறப்பதை பற்றி இயேசு சொல்லும்போது இப்படியாக சொல்லுகிறார், *"மாமிசத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும"*. ஒரு மனிதர் ஆவிக்குரிய மனிதனாக, புது ஆவியோடு *(எசே 36:26)* மறுபடியும் பிறக்க வேண்டுமென்றால், அவர் வேத வசனங்களை கேட்டு, அவற்றை தன் இருதயத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும். வேதவசனமாகிய ஆவியே ஒரு புதிய ஆவிக்குரிய மனிதனை பிறக்க வைக்க முடியும். இதைத்தான் இயேசு மறுபடியும் பிறப்பது என்று அழைக்கிறார். ஒரு தக்காளி செடி எப்படி ஒரு தக்காளி விதை இல்லாமல் தோன்ற முடியாதோ, அப்படியே ஒரு ஆவிக்குரிய மனிதனும் ஒரு ஆவிக்குரிய விதை (வேத வசனம்) இல்லாமல் தோன்ற முடியாது. ஒரு மனிதர் மறுபடியும் பிறப்பதற்காக வேத வசனங்களை கேட்க வேண்டுமென்றால், இன்னொருவர் அவருக்கு சொல்லிக்கொடுக்க வேண்டும். இதைத்தான் *ரோமர் 10:13-17* வசனங்கள் அழகாக சொல்லுகின்றன.

*ரோம 10:13 ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்.*
*14 அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக்கேள்விப்படுவார்கள்?*
*15 அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக்கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே.*
*16 ஆனாலும் சுவிசேஷத்துக்கு எல்லாரும் கீழ்ப்படியவில்லை. அதைக்குறித்து ஏசாயா: கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார் என்று சொல்லுகிறான்.*
*17 ஆதலால் விசுவாசம் கேள்வியினாலேவரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.*

இதனால்தான் இயேசு "சீஷராக்குங்கள்" என்று சொன்னார். ஆனாலும் பல விசுவாசிகளும் சீஷனாக்கும் சுவிசேஷம் பிரசங்கிக்காமல் இருக்கிறார்கள். பல அருமையான விசுவாசிகளும், தாங்கள் செய்யும் பல கிறிஸ்தவ வேலைகளுமே **"சுவிசேஷ வேலை"** என்று அதோடு நிறுத்தி விடுகிறார்கள். இங்கேதான் நாம் சுவிசேஷம் பிரசங்கிப்பதற்கு உதவியாக செய்கிற வேலைக்கும், **இரட்சிப்பின் சுவிசேஷத்தை ஒரு மனிதருக்கு சொல்லிக்கொடுத்து அவரை இயேசுவின் சீஷனாக்குவதற்கும்** உள்ள வேறுபாட்டை அறிந்து கொள்ள வேண்டும். ஒரு மனிதரை சந்தித்து அவருடைய வியாதிக்காக, துக்கத்துக்காக ஜெபிப்பது, நாம் சுவிசேஷம் பிரசங்கிப்பதற்காக செய்கிற வேலைகள். ஆனால் நாம் அதோடு நிறுத்தி விடக்கூடாது. மேலே சென்று அவருக்கு - பாவம், மரணம், இயேவின் சிலுவை மரணம், பாவ மன்னிப்பு, இயேசுவின் உயிர்த்தெழுதல், இருதயத்தில் விசுவாசித்தல், இயேசுவை அறிக்கையிடுதல் - போன்ற காரியங்களை சொல்லிக்கொடுத்து அவரை இரட்சிப்புக்குள் ( மறுபிறப்புக்குள் ) நடத்த வேண்டும். பின் தொடர்ந்து வேதாகமத்தின் மற்ற சத்தியங்களையும் சொல்லிக்கொடுத்து அவர்களை அவற்றில் நிலைத்திருக்கும்படியாக செய்ய வேண்டும். இதுதான் **"சீஷராக்குவது"** *(யோவான் 8:31-32).*

பல விசுவாசிகளும் ஏதாவது ஒரு கூட்டத்துக்கு போய், அல்லது யாரோ ஒருவர் சொன்னார் என்பதற்காக ஒரு ஜெபத்தை சொல்லிவிட்டு தாங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டோம், இனிமேல் ஒன்றும் இல்லை என்று வல்லமையின்றி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இரட்சிப்பின் மாபெரும் நன்மைகளை அனுபவிக்காமல் இருக்கிறார்கள். இன்னும் சிலர் சில குறிப்பிட்ட சபைகளில் சேருவது, அல்லது சில குறிப்பிட்ட சபைகளை விட்டு விலகுவது, இவைகள்தான் இரட்சிப்பு என்று நினைத்துக்கொள்கிறார்கள். சில குறிப்பிட்ட சபைகளில் அங்கத்தினராகி விட்டால் தாங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டதாக சிலர் நம்புகிறார்கள். பல பாரம்பரிய சபைகளில் இருப்பவர்கள் அனைவருமே இரட்சிக்கப்பட்டவர்கள் அல்ல என்று சொல்ல முடியாது; **அது போலவே சில எழுப்புதல் சபைகளில் இருப்பவர்கள் எல்லோரும் இரட்சிக்கப்பட்டவர்கள் என்றும் சொல்லிவிட முடியாது.** ஒரு மனிதர் எப்படி இரட்சிக்கப்படக்கூடும் என்று வேதாகமம் தெளிவாக *ரோமர் 10: 9-10* ல் சொல்லுகிறது. " *என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். 10 நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்.* **ஒருவர் வேத வசனங்கள் சொல்வது போல இரட்சிக்கப்படுவதே, சரியான இரட்சிப்பு.** ஒருவர் தேவனுடைய வசனத்தை கேட்டு அதில் இருந்து விசுவாசத்தை பெற்று, நாம் எப்படி பாவி ஆனோம், பாவத்தின் சம்பளம் என்ன, இயேசு கிறிஸ்து எப்படி நமக்கு மீட்பு வாங்கி தந்தார், என்று வேத வசனங்களின் அடிப்படையில் புரிந்து இருதயத்தில் விசுவாசித்து, இயேசு என் இரட்சகர் என்று தன் வாயினால் அறிக்கைபண்ணும்போது **இரட்சிக்கப்படுகிறார்.** அதோடு நின்று விடாமல் இரட்சிப்பை பற்றி படித்து கேட்டு, பாவம், மீட்பு, பாவ மன்னிப்பு, பரிசுத்த ஜீவிதம், கிருபையினால் நீதிகரணம், வேதாகம உடன்படிக்கை போன்ற அடிப்படை உபதேசங்களை கற்று அதில் நிலைத்திருக்கும்போது *( யோவான் 8:31,32 )* அவர் சீஷனாகிறார். இப்படிப்பட்ட ஒருவர் ஒரு உண்மையான சீஷனாக வாழ முடியும், மாத்திரமல்ல இப்படிப்பட்ட ஒரு சீஷன்தான் மற்றொரு சீஷனையும் உருவாக்க முடியும். இந்த வேலையை செய்வதற்காகத்தான் இயேசு நமக்கு கட்டளையிட்டிருக்கிறார். இதற்காக நாம் மற்ற பல உதவிகளை மற்றவர்களுக்கு செய்ய வேண்டும். இதுதான் இயேசு கற்பித்திருக்கிற திட்டம். இரட்சண்ய சேனையின் ஸ்தாபகர், **ஜெனரல் வில்லியம் பூத்** அவர்கள் ஒரு வாக்கியத்தை எப்போதும் உபயோகிப்பதுண்டு

அது, " soap, soup, salvation ". இதன் அர்த்தம், ஒரு மனிதனை சுத்தப்படுத்த வேண்டும், அவனுக்கு உணவு கொடுக்க வேண்டும், அவனை இரட்சிப்புக்குள் நடத்த வேண்டும். ஏனென்றால் பட்டினியாக இருக்கும் ஒருவனிடம் "நீ இரட்சிக்கப்பட வேண்டும்" என்று சொன்னால், அவனுக்கு புரியாது, அதை அவன் ஏற்றுக்கொள்வது கடினம். ஆகவே முதலில் ஒரு மனிதனின் அடிப்படை தேவைகளை சரிசெய்ய முயற்சித்து விட்டு அதை தொடர்ந்து இரட்சிப்பை சொல்லிக்கொடுக்க வேண்டும். அதே சமயம் ஒரு மனிதனை சுத்தப்படுத்தி, அவனுக்கு உணவு கொடுத்து, ஆடை கொடுத்து பின் முக்கிய காரியமான "இரட்சிப்பை" சொல்லிக்கொடுக்காமல் இருப்பது, மற்ற எல்லாவற்றையும் விருதாவாக்கிவிடும். முதலில் சுவிசேஷம் பிரச்ங்கிப்பதற்கான வேலைகளை செய்ய வேண்டும், தொடர்ந்து சுவிசேஷம் பிரசங்கிக்க வேண்டும்.

## யார் சுவிசேஷம் பிரசங்கிக்க வேண்டும்?

*அப் 8:1 அவனைக் கொலைசெய்கிறதற்குச் சவுலும் சம்மதித்திருந்தான். அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. **அப்போஸ்தலர்தவிர**, மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப்போனார்கள்.*
*அப் 8:4 சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள்.*
இந்த வசனங்கள் சொல்வது, **அப்போஸ்தலர் தவிர மற்றவர்கள் அனைவரும்** சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள். அதனால் சுமார் 300 வருடங்களுக்குள்ளாக உலகத்தின் பெரும்பாலான மக்களும் கிறிஸ்தவர்கள் ஆனார்கள். ஆனால் இன்று பல சபைகளிலும் **அப்போஸ்தலர் மாத்திரம்** சுவிசேஷம் பிரசங்கிக்கிறார்கள். அதுதான் இந்த நிலமை.
*அப்போஸ்தலர் 10* வது அதிகாரத்தில் ஒரு தேவதூதன், கொர்நெலியுவிடம் சென்று, பேதுரு வந்து கொர்நெலியுவுக்கு சுவிசேஷம் **பிரசங்கிக்கவேண்டும்** என்று சொல்லுகிறான். ஏன் அந்த தேவதூதன் நேரடியாக கொர்நெலியுவிடம் சுவிசேஷம் சொல்லியிருக்கக்கூடாது. இது இன்னும் வல்லமையானது போல இருக்குமே. ஏனென்றால் சுவிசேஷம் பிரசங்கிக்கும் அதிகாரம் தேவதூதர்களுக்கு கொடுக்கப்படவில்லை, மனிதர்களுக்கே கொடுக்கப் பட்டிருக்கிறது. *( மத் 28:18-20 ) (அப் 9: 6,17).* **எல்லா விசுவாசிகளும் சுவிசேஷம் சொல்ல வேண்டும்.** இதுதான் வேதாகமத்தின் திட்டம்.

## சுவிஷேஷம் எங்கே பிரசங்கிக்கப்பட வேண்டும்?

தேவாலயத்திலும் பொது இடங்களிலும் *( அப் 2:1-46 ).* யூதருடைய ஜெப ஆலயத்தில் *( அப் 14:1 ).* பட்டணங்கள் முழுவதும் *( அப் 8:5 ).* வனாந்தரத்தில் *( அப் 8:26 ).* ஆற்றோரங்களில் *( அப் 16:13-15 ).* ஜெயிலில் *( அப் 16;23-39 ).* வீடுகள் தோறும் *( அப் 20:21-22 ).* இன்னும் *அப் 1:8* வது வசனத்தின் படி நாம் எங்கு இருக்கிறோமோ அங்கு. சுருக்கமாக சொல்லப்போனால் **"எங்கும்".**

## ஒரு நேரத்தில் ஒருவருக்கு சுவிசேஷம்;

*அப் 5:42 தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்.*
இங்கே நீங்கள் கவனிக்க வேண்டும், ஆதி திருச்சபையின் சீஷர்கள் தினந்தோறும் தேவாலயத்தில் கூடிவந்தார்கள், அதோடு கூட வீடுகளிலும் இயேசுவே கிறிஸ்து என்று உபதேசம் பண்ணினார்கள். வீடு வீடாக அல்லது வாசல் வாசலாக சென்று சந்திப்பது இயற்கைக்கு மாறுபட்டது அல்லது அசௌகரியமானது என்று பல விசுவாசிகளும் நினைக்கிறார்கள். ஒரு புள்ளி விபரம் இவ்வாறாக சொல்லுகிறது, 'உண்மையான விசுவாசிகளில் சுமார் 85 சதவீதம் பேர்களும் ஒருவர் தனியாக சுவிசேஷம் சொன்னதால் இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களே, சுமார் 15 சதவீதம் பேர்கள் மாத்திரமே கூட்டங்களில் இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள்' என்று. சுவிசேஷம் சொல்வதற்கு ஒரு நல்ல வழி ஒருவரை தனியாக சந்தித்து அவரோடு பேசி, அவர் சுக துக்கங்களை பகிர்ந்து கொண்டு அவருக்கு சுவிசேஷம் சொல்வது.

## என்ன வெட்கம், ஏன் தயக்கம்:

*மாற் 8:38 ஆதலால் விபசாரமும் பாவமுமுள்ள இந்தச் சந்ததியில் என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக்குறித்தும் எவன் வெட்கப்படுவானோ, அவனைக் குறித்து மனுஷகுமாரனும் தமது பிதாவின் மகிமைபொருந்தினவராய்ப் பரிசுத்த தூதர்களோடுங்கூட வரும்போது வெட்கப்படுவார் என்றார்.*
*லூக் 9:26 என்னைக்குறித்தும் என் வார்த்தைகளைக்குறித்தும் எவன் வெட்கப்படுகிறானோ, அவனைக்குறித்து மனுஷகுமாரனும் தம்முடைய மகிமையோடும் பிதாவின் மகிமையோடும் பரிசுத்த தூதர்களின் மகிமையோடும் வரும்போது வெட்கப்படுவார்.*
*ரோம 1:16 கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது.*
*2தீமோ 1:8 ஆகையால் நம்முடைய கர்த்தரைப் பற்றிய சாட்சியைக்குறித்தாவது, அவர் நிமித்தம் கட்டப்பட்டிருக்கிற என்னைக் குறித்தாவது, நீ வெட்கப்படாமல், தேவ வல்லமைக்கேற்றபடி சுவிசேஷத்திற்காக என்னோடேகூடத் தீங்கநுபவி.*
*ரோம 10:11 அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது.*
மனிதர்கள் பலரும் உலகப்பிரகாரமான தங்களது தலைவரைப்பற்றி, அவர் எப்படிப்பட்டவராக இருந்தாலும், எல்லோரிடமும் சொல்லுகிறார்கள். ஒரு வெட்கமோ, தயக்கமோ இன்றி. நாமும் நமக்காக உயிர் கொடுத்த நம் இயேசுவை பற்றி சொல்ல ஏன் வெட்கப்பட வேண்டும் ? ஏன் தயக்கம் கொள்ள வேண்டும் ? நம் இயேசுவிடம் என்ன குறை இருக்கிறது ? நாம் தலை நிமிர்ந்து இயேசுவைப்பற்றி சொல்ல வேண்டுமே தவிர வெட்கப்பட

வேண்டிய அவசியம் இல்லை. நமக்காக எவ்வளவோ வெட்கங்களை சகித்த இயேசுவிடம், நாம் அவரைப்பற்றி வெட்கப்படும்படியான ஒரு காரியமும் இல்லை. பெருமைப்படுவதற்கே எல்லாம் இருக்கிறது.

## சுவிசேஷம் பிரசங்கிப்பது நம் கடமை.

*1கொரி 9:16 சுவிசேஷத்தை நான் பிரசங்கித்துவந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ.*
*1கொரி 9:17 நான் உற்சாகமாய் அப்படிச் செய்தால் எனக்குப் பலன் உண்டு; உற்சாகமில்லாதவனாய்ச் செய்தாலும், உக்கிராண உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதே.*
*பிலி 3:8 அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்.*
பவுல் அப்போஸ்தலன் நினைத்திருந்தால், தன் படிப்பு, அறிவு, அந்தஸ்து இவற்றை வைத்து நல்ல வேலையில், நல்ல வசதியோடு, நல்ல சொத்து சுகத்தோடு, நல்ல வசதியான குடும்பத்தோடு வாழ்ந்திருக்கலாம். ஆனாலும் அவர் இவற்றை எல்லாம் குப்பையாக எண்ணி, "சுவிசேஷம் பிரசங்கிப்பதை" தன் **கடமையாக** எடுத்துக்கொண்டார். நாமும் சுவிசேஷம் பிரசங்கிப்பதை நம் "கடமை" யாக, வாழ்க்கையில் செய்யவேண்டிய மிக முக்கியமான காரியமாக எடுத்துக்கொள்வோமானால் " **எல்லாம்** " இயேசுவின் வாக்குத்தத்தப்படி கூட கொடுக்கப்படும் *( மத் 6:33 ).*

## தேவனுடைய பார்வையில் "ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தாமல் இருப்பது" என்பது "ஆத்துமாக்களை சிதறடிப்பது"

*மத் 12:30 என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்.*
*லூக் 11:23 என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான், என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்.*

தேவனுடைய கணக்குப்படி, ஒருவரை நாம் சந்தித்து, எல்லா வாய்ப்புக்களும் இருந்த பிறகும், அவருக்கு சுவிசேஷம் சொல்லி அவரை இயேசுவிடம் சேர்க்காமல் இருப்பது, அவரை இயேசுவை விட்டு பிரிப்பதற்கு சமமாகும்.
இயேசு பூமியில் ஊழியம் செய்த நாட்கள் முழுவதிலும், ஏற்றுக்கொண்டவர்கள் அனைவரையும் தேவனோடு சேர்த்தார். அவர் பூமியில் இருந்து செல்லுமுன்பாக இதை செய்வதற்கான அதிகாரமும், வல்லமையும் தந்து நம்மை தொடர்ந்து இதை செய்ய சொல்லியிருக்கிறார் *( மத்தேயு 28:19-20, மாற்கு 16 15-18 ).*

*1யோவா 3:8 பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான்; பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்.*
பாவத்தின் அடிமைத்தனம், வியாதி, அழிவு, இல்லாய்மை, போன்ற அனைத்தும் பிசாசின் கிரியைகளே. இவைகள் அழிக்கப்பட வேண்டும். நம்மை சுற்றி இருக்கிற இவைகளை பார்த்தும் ஒன்றும் செய்யாமல் இருப்பது, நாம் பிசாசுக்கு உதவி செய்வதை போன்றது. இதைத்தான் இவ்வசனங்கள் சொல்லுகின்றன.

## சரியான சுவிசேஷம் பிரசங்கிக்க வேதாகமம் முழுவதையும் உபயோகிக்க வேண்டும்.

*மத். 13:18-23; மாற்கு 4:14-20; லூக்கா 8:9-15* போன்ற இடங்களில் விதை விதைக்கிற உவமை குறிப்பிடப்பட்டுள்ளது. இதை படிக்கும்போது நாம் அறிந்து கொள்ளலாம், ஒவ்வொருவருடைய இருதய நிலமையும் வெவ்வேறாக இருக்கிறது. ஆகவே ஒவ்வொரு மனிதருக்கும் அவருக்கு ஏற்ற விதத்தில் வேத வசனங்களை உபயோகிக்க வேண்டும். இயேசு இம்மாதிரி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதத்தில் சுவிசேஷம் சொன்னார். விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணுக்கு இயேசு கிருபையை உபதேசித்தார் *( யோவான் 8:3-11 ).* சமாரியாவில் யாக்கோபின் கிணற்றருகே, சமாரிய பெண்ணிடம், இயேசு அறிவை உணர்த்தும் வரத்தை உபயோகித்தார் *( யோவான் 4:16-18 ).* சகேயுவிடம், அவனோடு அவன் வீட்டுக்கு சென்று தங்குவதை உபயோகித்தார் *( லூக்கா 19:1-10 ).* ஐசுவரியவானாகிய வாலிபனிடம் நியாயப்பிரமாணத்தை உபயோகித்தார் *( மத்தேயு 19:16-22 ).*

## மனந்திரும்புதல், இரட்சிப்பின் தேவையை ஒருவர் தன் இருதயத்தில் உணர்ந்து இரட்சிக்கப்பட வேண்டும்.

ஏதாவது ஒரு உணர்ச்சிப்பூர்வமான சூழ்நிலைக்கு மக்களை தள்ளி, அவர்களை கட்டாயப்படுத்தி, அவர்களை இயேசுவை ஏற்றுக்கொள்ள வைப்பது வேறு. அவர்களாகவே உணர்ந்து இதயத்தின் ஆழத்திலிருந்து, **எனக்கு இந்த இரட்சிப்பு வேண்டும்** என்று சொல்வது வேறு. இதுதான் **உண்மையான மனந்திரும்புதல்,** இரட்சிப்பு. உண்மையான இரட்சிப்பு இருதயத்தில் இருந்து நடைபெற வேண்டும். இப்படித்தான் வேதாகமத்தின் பல இடங்களிலும் நடந்திருக்கிறது.
*அப் 2:1-37. அப் 2:37 இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: **சகோதரரே, நாங்கள் என்னசெய்யவேண்டும்** என்றார்கள்.*

*அப் 8 35-37. அப் 8:36 இவ்விதமாய் அவர்கள் வழிநடந்துபோகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி: இதோ, தண்ணீர் இருக்கிறதே, **நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன** என்றான்.*

*அப் 16:13 ஓய்வுநாளில் நாங்கள் பட்டணத்துக்கு வெளியே போய், ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம்பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்து, அங்கே கூடிவந்த ஸ்திரீகளுக்கு உபதேசித்தோம்.*
*14 அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக்கொண்டிருந்தாள்; பவுல் சொல்லியவைகளைக்கவனிக்கும்படி* ***கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார்.***

*அப் 16. 29-31. அப் 16:30 அவர்களை வெளியே அழைத்து வந்து: ஆண்டவமாரே,* ***இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்றான***

*மாற் 10:17 பின்பு அவர் புறப்பட்டு வழியிலே போகையில், ஒருவன் ஓடிவந்து, அவருக்கு முன்பாக முழங்கால்படியிட்டு: நல்ல போதகரே,* ***நித்தியஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி நான் என்ன செய்யவேண்டும்*** *என்று கேட்டான்.*

*லூக்கா 23:39-43. லூக் 23:42 இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது* ***அடியேனை நினைத்தருளும்*** *என்றான*

*லூக் 18:13 ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு:* ***தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்*** *என்றான். ( லூக்கா 18:9-14. )*

## பலரும் சுவிசேஷம் சொல்லாமல் இருப்பதற்கான ஒரு பிரதான காரணம், நான் சுவிசேஷம் சொல்லி அவர்கள் என்னை ஏற்றுக்கொள்ளாமல் தள்ளி விடுவார்களோ என்ற பயம்.

சாதாரணமாக மனித மனதுக்கு தாங்கிக்கொள்ள முடியாத ஒரு காரியம் "ஏற்றுக்கொள்ளாமல் தள்ளி விடப்படுதல் ( Rejection )". இது எல்லோர் மனதிலும் உள்ள பயம். அவர்கள் நான் சொல்வதை ஏற்றுக்கொள்ளாமல் **என்னை** தள்ளி விடுவார்களோ என்ற பயம். இங்கே நாம் மனதிலாக்கிக்கொள்ள வேண்டும், அவர்கள் 'ஏற்றுக்கொள்ளாமல் தள்ளி விடுவது' உங்களை அல்ல **"நீங்கள் சொல்கிற சுவிசேஷத்தை"**. அவர்கள் தள்ளி விடுவது உங்களை அல்ல, **"இயேசு கிறிஸ்துவை - தேவனை"**. ஏனென்றால் *யோவான் 6:44* சொல்லுகிறது "*என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன்.*" அது போல், உங்களை, சுவிசேஷத்தை ஒருவர் ஏற்றுக்கொள்கிறார் என்றால் அவர் இயேசுவை, தேவனை ஏற்றுக்கொள்கிறார் என்று அர்த்தம் ( *மத் 10:40* )
சுவிசேஷம் பிரசங்கித்தலில், நம்முடைய பாகத்தையும் தேவனுடைய பாகத்தையும் நன்றாக மனதிலாக்கிக்கொள்ள வேண்டும்.

**நம்முடைய பாகம்;**

*மத் 28:18 அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.*
*19 ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,*
*20 நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.*
*2கொரி 5:20 ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.*

**தேவனுடைய பாகம்:**

*சக 4:6 ........ பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.*
*1கொரி 2:4 உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு,*
*5 என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருந்தது.*
*யோவா 6:44 என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன். (யோவா 6:65)*

## ஒரு மனிதருக்கு சுவிசேஷம் சொல்லுவது எப்படி ?

### 1. ஒரு மனிதரை அணுகுவதற்கு உபயோகமான சில அணுகுமுறைகள்.

1. அவருடன் அன்பாக பேசுவது. அவரது கருத்துக்களை, அவரது பிரச்சினைகளை பொறுமையாக கேட்பது.
2. அவருக்காக ஜெபிப்பது. யாரிடமும், நான் உங்களுக்காக ஜெபிக்கலாமா என்று கேட்டால் அவர்கள் வழக்கமாக வேண்டாம் என்று சொல்ல மாட்டார்கள். அவருக்காக,
அவருடைய ஏதாவது குடும்ப, நோய், பண பிரச்சினைக்காக ஜெபிப்பது.
3. அவரை தனியாக, அல்லது குடும்பமாக சென்று சந்திப்பது, வாழ்த்துவது.
4. ஏதாவது உணவோ, பணமோ, அல்லது வேறு ஏதாவது ஒரு உதவியோ செய்வது.
5. அவர்கள் குழந்தைகளை பார்த்துக்கொள்வது.

6. அவர்களுடைய பிரயாணங்களில் உதவுவது. உங்களிடம் வாகனம் இருந்தால், அவர்களுடைய தேவைக்காக உபயோகிப்பது.

இவைகள் சில அணுகுமுறைகள் மாத்திரமே. சூழ்நிலைக்கேற்ப நீங்கள் மற்ற அணுகு முறைகளை உபயோகிக்கலாm. உங்களுக்கு மனதுருக்கம் இருந்தால் ஏராளமான வாய்ப்புக்களை நீங்கள் காண்பீர்கள்.

## 2. சுவிசேஷம் பிரசங்கிக்க தொடங்குவதற்கு உபயோகமான சில கேள்விகள்.

1. உங்களுக்கு ஏதாவது ஒரு வகை ஆத்மீக நம்பிக்கை இருக்கிறதா ?
2. உங்களுக்கு, இயேசு கிறிஸ்து யார் ?
3. பரலோகம் என்ற ஒன்று நரகம் என்ற ஒன்று இருக்கிறது என்று நீங்கள் நம்புகிறீர்களா ?
4. இப்போது நீங்கள் மரித்தால் எங்கே செல்வீர்கள் ?
5. நீங்கள் நம்புவது சரியல்ல என்றால், அதை அறிந்து கொள்ள நீங்கள் விரும்புகிறீர்களா ?
6. இயேசுகிறிஸ்துவை பற்றியும் அவர் உங்களுக்கு என்ன செய்திருக்கிறார் என்பதை பற்றியும் அறிய விரும்புகிறீர்களா ?

சுவிசேஷம் பிரசங்கிக்க உங்களது சொந்த சாட்சியையும் மிக வல்லமையாக உபயோகிக்கலாம். இது சுவிசேஷம் பிரசங்கிப்பதற்கான வழிமுறைகளில் ஒன்று. அப்.பவுல் தன்னுடைய சாட்சியை *அப் 22* ஆம் அதிகாரத்தில் விளக்குகிறார். இது போல் இன்னும் பல இடங்களில் சொல்லுகிறார். துண்டுப்பிரதிகள் ( Tracts ) மிகவும் உபயோகமாக இருக்கும். உங்களது சாட்சியை, அல்லது மற்றவர்களின் சாட்சிகளை சுருக்கமாக குறிப்பிடும் துண்டுப்பிரதிகளை உபயோகிக்கலாம்.

## 3. வேதாகமத்தில் இருந்து உபயோகிக்க சில முக்கியமான வசனங்கள்.

1. ***ரோம 3:23*** ***எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி,***
2. ***ரோம 6:23*** ***பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்.***
3. ***யோவா 3:3*** ***இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.***
4. ***யோவா 14:6*** ***அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.***
5. ***ரோம 10:9*** ***என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். 10 நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்.***
6. ***வெளி 3:20*** ***இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்.***

இவ்வசனங்களை மனப்பாடம் செய்து வைத்துக்கொள்ளுங்கள். அல்லது அடுத்தடுத்து வேதாகமத்தில் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். அதாவது *ரோமர் 3:23* க்கு பக்கத்தில் *ரோமர் 6:23* என்று. இது குழம்பாமல் தொடர்ச்சியாக சொல்லுவதற்கு வசதியாக இருக்கும்.

## 4. இறுதிக்கேள்விகள்.

1. நீங்கள் ஒரு பாவி என்று ஏற்றுக்கொள்கிறீர்களா ?
2. பாவ மன்னிப்பு, உங்களுக்கு வேண்டுமா ?
3. இயேசு கிறிஸ்து, உங்களுக்காக சிலுவையில் மரித்து மீண்டும் உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசிக்கிறீர்களா ?
4. உங்களை இயேசு கிறிஸ்துவிடம் ஒப்புக்கொடுக்க நீங்கள் விரும்புகிறீர்களா ?
5. இயேசு கிறிஸ்துவை, உங்கள் இருதயத்துக்குள்ளும், உங்கள் வாழ்க்கைக்குள்ளும் வரவேற்று ஏற்றுக்கொள்ள நீங்கள் தயாராக இருக்கிறீர்களா ?

இந்த இடத்தில், உங்கள் பேச்சை சற்று நிறுத்திக்கொள்ளுங்கள். பரிசுத்த ஆவியானவர் அவரது மனதில் பேச சமயங்கொடுங்கள். அவர் பதில் சொல்ல எவ்வளவு சமயம் எடுத்தாலும், காத்திருங்கள். அப்படி காத்திருக்கும்

சமயத்தில் அவருக்காக ஊக்கமாக மனதில் ஜெபித்துக்கொண்டிருங்கள். இந்த சமயம், ஒரு மனிதர் தான் இயேசுவை ஏற்றுக்கொண்டு பரலோகம் செல்லப்போகிறாரா, அல்லது சாத்தானோடு நரகம் செல்லப்போகிறாரா என்று தீர்மானிக்கும் சமயம். இந்த சமயத்தை அப்படியே பரிசுத்த ஆவியானவரின் கிரியைக்காக, அவரது கரங்களில் முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள்.

நீங்கள் பேசும் மனிதரின் பதில், ஆம், எனக்கு சற்று சமயம் தேவை, இது எனக்கு தேவை இல்லை, என்பவற்றில் ஒன்றாக இருக்கலாம். அவரது பதில் எதிர் மறையாக இருந்தால் கோபப்படவோ, எரிச்சலடையவோ செய்யாதீர்கள். புன் முறுவலோடு, சரி சகோதரா நாம் ஜெபிப்போம் என்று சொல்லி ஒரு ஜெபத்தோடு நிறைவு செய்யுங்கள். அவர் சற்று சமயம் தேவை, நான் இப்போது தயாராக இல்லை என்று சொன்னால், **ஏன் என்ன காரணம்** என்று கேளுங்கள். மீண்டும் அடுத்த முறை சந்திக்க முயற்சி செய்யுங்கள். உங்கள் வேலையை நீங்கள் செய்து விட்டீர்கள், மீதி வேலையை பரிசுத்த ஆவியானவர் செய்யும்படியாக ஒப்புக்கொடுங்கள். அவரது பதில் " ஆம், நான் இயேசுவை என் ரட்சகராக என் இருதயத்துக்குள், வாழ்க்கைக்குள் ஏற்றுக்கொள்கிறேன்" என்று இருக்குமானால், தொடர்ந்து இந்த ஜெபத்தில் அவரை நடத்துங்கள். அவர் தன் வார்த்தைகளினால் இதை சொல்லும்படியாக அவரை வழி நடத்துங்கள். இது ஒரு மாதிரி ஜெபம் மாத்திரமே, வார்த்தைக்கு வார்த்தை இப்படியே இருக்க வேண்டும் என்பதில்லை. சூழ்நிலை, நீங்கள் சந்திக்கிற மனிதரை பொறுத்து சில மாற்றங்களை செய்து கொள்ளுங்கள்.

### மாதிரி ஜெபம்;

***அப்பா பிதாவே ! உம்முடைய கிருபை வரமாகிய நித்திய ஜீவனுக்காக நன்றி. நான் ஒரு பாவி என்றும், பாவத்தின் சம்பளம் மரணம் என்றும் பூரணமாக அறிந்து கொண்டேன். என் பாவங்களுக்காக நான் வருந்துகிறேன். என்னை நீர் மன்னிக்கும்படியாக வேண்டுகிறேன். இயேசு கிறிஸ்து என் பாவங்களுக்காக சிலுவையில் மரித்து உயிர்த்தெழுந்தார் என்று, என் இருதயத்தில் விசுவாசிக்கிறேன். அறிக்கை செய்கிறேன். இயேசு கிறிஸ்து என் பாவங்களுக்காக பெற்றுத்தந்த பாவமன்னிப்பை ஏற்றுக்கொள்கிறேன்.***
***இயேசுவே, என் இருதயத்தை உமக்காக திறக்கிறேன். நீர் என் வாழ்க்கைக்குள் வாரும். இன்றிலிருந்து உம்மையே என் கர்த்தரும் ரட்சகருமாக ஏற்றுக்கொள்கிறேன். என்னை இரட்சித்ததற்காக நன்றி. தேவனே இன்றிலிருந்து நான் உம் பிள்ளை. நீர் என்னை நடத்தும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் பிதாவே ! ஆமென்.***

இப்பொழுது அம்மனிதர் **"இரட்சிக்கப்பட்டிருக்கிறார்"**. மறுபடியும் பிறந்திருக்கிறார். தேவனுடைய பிள்ளை. *1 பேது 2:9-10* ல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா தகுதியும் உடையவர். இரட்சிப்பின் எல்லா ஆசீர்வாதங்களையும் வேதவசனங்களை அறிகிற அறிவின் மூலமாக பெற்றுக்கொள்ள தகுதி உள்ளவர் ஆகிறார். இந்த நிமிடத்தில் ***லூக்கா** 15:7* வசனத்தின் படி பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும்.
***யாக் 5:20*** *தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்.* இவ்வசனத்தின் படி, நீங்கள் ஒரு ஆத்துமாவை மரணத்திலிருந்து இரட்சிப்புக்குள்ளாக நடத்தியிருக்கிரீர்கள். நீங்கள் ஒரு ஆத்துமாவை ஆதாயப்படுத்தியிருக்கிறீர்கள். இரட்சிப்பின் சுவிசேஷம் பிரசங்கித்து அவரை இயேசுவோடு சேர்த்திருக்கிறீர்கள். இப்போது அவர் தேவனுடைய ராஜ்யத்தின் பிரஜை. அவரது திரளான பாவங்கள் மூடப்பட்டிருக்கின்றது. இனிமேல் தொடர்ந்து அவருக்கு வேதாகமத்தின் அடிப்படை உபதேசங்களை கற்றுக்கொடுத்து ஒரு சீஷனாக்க வேண்டும். அவர் இன்னொருவருக்கு சுவிசேஷம் சொல்லி, அவரை இரட்சிப்புக்குள்ளாக நடத்தும் அளவுக்கு அவருக்கு உதவி செய்ய வேண்டும்.

## சுவிசேஷம் பிரசங்கிக்கும்போது மற்றவர்கள் கேட்கிற சில கேள்விகளுக்கு, சந்தேகங்களுக்கு எப்படி பதிலளிப்பது ? அதற்கு உதவியான வசனங்கள்.

அன்பான விசுவாசிகள் பலருக்கும் சுவிசேஷம் பிரசங்கிக்க வேண்டும் என்ற ஆவல் உண்டு. ஆனால் ஒருவரிடம் பேசும்போது, அவர்கள் கேட்கிற பல கேள்விகளுக்கும் விடை தெரியாமல் சில நேரங்களில் திணறி விடுவதுண்டு. இதனால் சோர்ந்து போவதும் உண்டு. இந்த பகுதியில், வழக்கமாக சுவிசேஷம் பிரசங்கிக்கும்போது நான் என் அனுபவத்தில் சந்தித்திருக்கிற, மற்றும் சில சுவிசேஷகர்களின் அனுபவத்தில் சந்தித்திருக்கிற கேள்விகளையும் அவற்றுக்கு பதில் சொல்வதற்கு அடிப்படையான வசனங்களையும் கொடுத்திருக்கிறேன். ஒருவேளை இதில் சொல்லப்படாத ஏதாவது ஒரு கேள்வியை நீங்கள் சந்தித்திருப்பீர்களானால், அவற்றுக்கு பதில் தேவைப்பட்டால், நமது இணைய தளத்தின் comments பகுதியில் குறிப்பிட்டு கேளுங்கள். நான் அதற்கான வேதாகம வசனங்களை கொடுக்கிறேன். இதன் மூலம் அவை மற்றவர்களுக்கும் பிரயோஜனமாக இருக்கும். இன்னும் நீங்கள் சுவிசேஷம் சொல்லி , அவர்களது ஏதாவது ஒரு கேள்விக்கு விளக்கம் தேவை என்றாலும், தயவாக கேளுங்கள். வேதாகமத்தின் அடிப்படையில் பதில் எழுதுகிறேன். இன்னும் இது போல் கூடுதல் கேள்விகள், அவற்றுக்கான பதில் வசனங்கள் அடங்கிய மற்றொரு பட்டியலும் வெளியிடப்பட வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், தயவாய் எழுதுங்கள், நான் அருமை சகோதரன் Arche க்கு அனுப்பி வெளியிடுகிறோம்.

எதைப்பற்றியும் கவலை இல்லாதவர்களோடு பேச.

*மத் 22 : 37-38; யோவா 8:34; ஏசா 48:22; கலா 3:10; கலா 3:13; ஏசாயா 53:5-6; யோவான் 3:16; 1 பேதுரு 2:24. எபி 10:28,29.*

இரட்சிப்பை பெற்றுக்கொள்ள தயாராக, ஆனால் எப்படி இரட்சிக்கப்படுவது என்று தெரியாமல் இருப்பவர்களோடு பேச.

*ஏசாயா 53:5-6, 45:7; யோவான் 3:16, 36; அப் 16:31. ரோமர் 1:16; 1 கொரி 15: 1-4. லூக்கா 7: 37 - 50.*

நான் ரட்சிக்கப்பட முடியாத பெரிய பாவி என்று சொல்பவர்களோடு பேச.

*1தீமோ 1:15; லூக் 19:10; ரோம 5: 6 - 8 ; மத்தேயு 9:12-13, ரோமர்:10:13; யோவான் 1:29, 3:16; ஏசாயா 1:18, 44:22, 43:25; 1 யோவான் 4:14; எபிரேயர் 7:25.*

என்னால் தாக்கு பிடிக்கமுடியாது, நான் மீண்டும் விழுந்து விடுவேன் என்று சொல்பவர்களோடு பேச.

*1 பேதுரு 1:5; யோவான் 10:28,29; 2 தீமோ 1:12; ஏசாயா 41:10,13; யூதா 1:24; 2 நாளாகமம் 32:7,8; ரோமர் 14:4; 2 தெச 3:3; 1 கொரி 10:13.*

எனக்கு அவ்வளவு தைரியம் கிடையாது, என்னால் முடியாது.

*2 கொரி 12:9,10; பிலிப் 4:13; 1 கொரி 10:13.*

என்னால் என் தீய பழக்க வழக்கங்களை, நான் செய்து கொண்டிருப்பவைகளை விட முடியாது....

***கலா** 4:7,8; **பிலிப்** 4:13; 1 **கொரி** 15:3,4* ( இயேசு கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரிக்க மாத்திரம் செய்ய வில்லை, மீண்டும் உயிர்த்தெழுந்தார். சகல அதிகாரமும் இப்போது அவருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது ***மத்** 28:18* ).

நான் நிறைய காரியங்களை விட வேண்டுமே, அது முடியாது ......

*மாற்கு 8:36; பிலி 3:7,8; சங் 16:11; சங் 84:11; 1 யோவான் 2:17; லூக்கா 12:16-21.*

கிறிஸ்தவ வாழ்க்கை கடினமானது.

கிறிஸ்தவ வாழ்க்கை இலகுவானது, கடினமானது அல்ல என்று சொல்லும் வசனங்கள்: ***மத்** 11:30; **நீதி** 3:17; **சங்** 16:11; 1 **யோவான்** 5:3.*

பாவ வாழ்க்கைதான் கடினமானது. ***நீதி** 13:15.*

என் நண்பர்களை, என்னுடன் இருப்பவர்களை விட வேண்டியதிருக்குமே....

*நீதி 23:20, 29:25; சங் 1:1; 1 யோவான் 1:3.*

என் இருதயம் கடினமாக இருக்கிறது.

*எசே 36:26,27.*

எனக்கு ஒரு உணர்வும் ( Feelings ) இல்லையே..

சமாதானம் என்கிற உணர்வு, இயேசுவை விசுவாசித்து அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்வதனால் கிடைக்கிறது. ***கலா** 5:22; **எபே** 1:13; **அப்** 5:32; 1 **பேதுரு** 1:8; **மத்** 10:32.*

பாவி என்கிற உணர்வு இல்லை; பாவி என்ற உணர்வு வேண்டும் என்று தேவன் சொல்ல வில்லை இயேசுவில் விசுவாசித்து பாவத்தில் இருந்து விடுபட வேண்டும். ***ஏசா** 55:7; **அப்** 16:31; **யோவான்** 1:12.*

இரட்சிக்கப்பட வேண்டும் என்ற தாக உணர்வு மாத்திரம் போதும். ***வெளி** 22:17.*

மற்றவர்கள் என்னை ஏளனம் செய்வார்கள், உபத்திரவப்படுத்துவார்கள்.....

ஆம் மற்றவர்கள் உங்களை ஏளனம் செய்வார்கள், உபத்திரவப்படுத்துவார்கள். ஏளனமும், உபத்திரவமும் மகிமைக்கான வழி.

***ரோம 8:18** ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்.*

*2 தீமோ 2:12, 3:12; மத் 5:10,11,12; மாற்கு 8:35; அப் 5:41, 14:22; 1 பேதுரு 2:20,21; எபிரேயர் 12:2,3.*

நான் இப்போது இருக்கிற வேலையில் இருந்து கொண்டு இரட்சிக்கப்பட முடியாது. அது என் வேலையை பாதிக்கும்....

*மாற்கு 8:36; மத்தேயு 6:32-33, 16:24-27; லூக்கா 12:16-21, 16:24-26.*

என்னால் நம்ப முடியவில்லை...

*யோவான் 5:44; ஏசாயா 55:7.*

**எனக்கு காலம் கடந்து விட்டது .....**

*2 கொரி 6:2; லூக்கா 23:39-43; 2 பேதுரு 3:9; உபா 4:30-31; ஏசாயா 1:18; வெளி 22:17.*

**தவறான விசுவாசம் வைத்திருப்பவர்கள்....**

இவர்களில் பலரும் "தங்கள் நற்கிரியைகளின் மேல் விசுவாசம் வைத்திருப்பவர்கள்". தாங்கள் செய்கிற நற்கிரியைகளினால் இரட்சிக்கப்பட முடியும் என விசுவாசிக்கிறவர்கள்.
என்னால் முடிந்த அளவுக்கு நல்ல படியாக வாழுகிறேன். நல்லதை செய்கிறேன். நான் யாரையும் உபத்திரவிப்பதில்லை. பெரிய பாவங்கள் ஒன்றும் செய்வதில்லை.
***கலா 2:16, 3:10; யாக்கோபு 2:10; ரோமர் 3:19-20; மத் 5:20; ஏசாயா 64:6; மத்தேயு 22:37-38.***
தேவன் இருதயத்தை பார்க்கிறார், நீங்கள் தேவனுக்கு முன்பதாக நிற்கும்போது உங்கள் இருதயம் சுத்தமாக இருக்குமா ? ***( லூக்கா 16:15, ரோமர் 2:16: 1 சாமு 16:7 )***

**தேவன் அன்பானவர். அவர் யாரையும் நரகத்துக்கு அனுப்புவதில்லை....**

*ரோமர் 2:2,4-5; யோவான் 3:36, 5:40, 8:21,24; 2 பேதுரு 2:4-6,9. 3:9-11 எசே 33:11. லூக்கா 13:3.*

**நாம் பரலோகத்துக்குதான் போவேன் என்று விசுவாசிக்கிறேன். நான் இரட்சிக்கப்பட்டவன் என்று நினைக்கிறேன்.**

உங்கள் மேல் உங்களுக்கு இருக்கிற விசுவாசம் மாத்திரம் உங்களை பரலோகம் அழைத்து செல்வதில்லை. இயேசுவின் மேல், அவரது வார்த்தையின் மேல் நீங்கள் வைக்கும் விசுவாசமே உங்களை பரலோகம் அழைத்து செல்லும். ***யோவான் 3:36; லூக்கா 18:9-14; நீதி 14:12.***

**இரட்சிக்கப்பட்டும், மீண்டும் வழி தவறி வாழ்ந்து கொண்டிருப்பவர்களுடன் பேச...**

மீண்டும் திரும்பி வர மனதில்லாமல் இருப்பவர்களுடன் பேச..... *எரே 2: 6,13,19; நீதி 14:13; 1 ராஜாக்கள் 11:9-10; லூக்கா 15:13-17; ஆமோஸ் 4:11,12.*
மீண்டும் திரும்பி வர தயாராக இருப்பவர்களுடன் பேச..... *எரே 3:12,13,22; ஓசியா 14:1-4; ஏசாயா 43:22,24,25; 44:20-22; எரே 29:11-13. 1 யோவான் 1:9; 2:1,2; லூக்கா 15:11-24.*

**வேதாகமம் சொல்கிற இதெல்லாம் முட்டாள்தனம் என்று சொல்பவர்களுடன் பேச....**

*1 கொரி 1:18; 2:14; 2 கொரி 4:3,4; 2 தெச 1:7-8; 2:10-12; யோவான் 8:21,24; 5:44; 3:18,19,20.*
அறிவுப்பூர்வமாக எதிர்ப்பவர்களோடு பேச. ; ***யோவான் 7:17.***

**தேவன் இல்லை என்று சொல்பவர்களுடன் பேச...**

*சங் 14:1; 19:1,2; ரோமர் 1:19-22.*

**வேதாகமம் தேவனுடைய வார்த்தை அல்ல என சந்தேகிப்பவர்களுடன் பேச....**

*ரோமர் 3:34; மத் 24:35; 5:18; மாற்கு 7:13; யோவான் 10:35; 14;26; 16:12,13; லூக்கா 24:27,44; 1 தெச 2:13; 2 பேதுரு 1:21; 1 யோவான் 5:10.*

உங்களை சுற்றி இருக்கிற எத்தனையோ பேர், இயேசுவை ஏற்றுக்கொண்டு மறுபடியும் பிறக்காவிட்டால், நித்திய நரகத்துக்கு செல்லவிருக்கிறார்கள். அது நிச்சயம். அது சத்தியம் என்று உங்களுக்கு தெரியும். அவர்கள் இயேசுவை அறிந்த கொள்ள மிகவும் எளிதான வழி **"உங்கள் மூலமாக"** என்றும் உங்களுக்கு தெரியும். வேறு வழி ஒரு வேளை அவர்களுக்கு கிடைக்காமலே போகலாம் என்பதும் உங்களுக்கு தெரியும். அடுத்த முறை அவர்களை நீங்கள் பார்க்கும்போது, ஒருவேளை அவர்களை பாதாளத்தில் பார்க்க நேரிடலாம் என்றும் உங்களுக்கு தெரியும். இயேசுவின் ரகசிய வருகை எந்த நொடியிலும் இருக்கலாம், அப்படி இருந்தால் அவர்கள் அனைவரும் கைவிடப்படுவார்கள் என்பதும் உங்களுக்கு தெரியும். **தெரிந்த பின்னும் எப்படி உங்களால் சும்மா இருக்க முடிகிறது ?** என் குடும்பம், என் வேலை, என் பணம், என் எதிர்காலம், என் சந்தோஷம், என் ஷாப்பிங், என் விடுமுறை, என் ஓய்வு என்று எப்படி சுய நலத்தோடு வாழ முடிகிறது. நாம் இரட்சிக்கப்பட்டு, மறுபடியும் பிறந்து, பரிசுத்த ஆவியானவர் நம்முள் ஜீவித்துக்கொண்டிருக்கின்ற போதும், நாம் இயேசுவை பற்றி மற்றவர்களிடம் சொல்லாமல் இருப்பது, அவரை காட்டிக்கொடுப்பதற்கு சமம் அல்லவா. **பேதுரு ஒரு நாள் "அவரை எனக்கு தெரியாது " என்று வாய் திறந்து பேசி காட்டிக்கொடுத்தான், நாமோ தினம் தினம் "அவரை எனக்கு தெரியாது" என்று வாய் மூடி காட்டிக்கொடுக்கிறோம்.** புறப்படு சகோதரா ! புறப்படு சகோதரி ! ஏளனத்தை கண்டு சோராமல், எதிர்ப்பை கண்டு அஞ்சாமல், வெறுப்பை கண்டு தளராமல் தேவன் உனக்கு தந்திருக்கிற எல்லா அதிகாரத்தோடு போ ! யாராவது ஒருவரை சந்தித்து சுவிசேஷம் சொல்ல தொடங்கு, மீதியை உன் தேவன் பார்த்துக்கொள்வார்.

இயேசு சுவிசேஷம் சொல்ல தெரிந்தெடுத்திருக்கிற ஒரே வழி, " நீ ". *(அப்.10).*

சுவிசேஷம் பிரசங்கித்து சீஷராக்குங்கள்.

ஆசீர்வாதமாக இருங்கள்.

மற்றவர்களையும் இந்த மகா உன்னதமான ஆசீர்வாதத்துக்குள் நடத்துங்கள்.

ஆமென்.

**BRO. D.VERGIN KUMAR.**

If you need any clarifications kindly contact me in deeveekumar@yahoo.com Ph; 25572195, 99663557. 25546939, 99638328. Your comments are welcome.

**Resources;** Dakes bible commentary, Andrew Wommack bible commentary, Adam Clarke's Bible commentary, Vine's expository Dictionary of Bible words, Strong's Bible concordance, Thayer's Greek-English Lexicon, The Spiritual man - By Watchman nee, Webster's Dictionary, TIPS ON SHARING YOUR FAITH. BY. DON KROW, "How Can I Share My Faith Without an Argument?" by Bill Fay, "How to bring men to Christ," by R. A. Torry, Wuest's word studies of the Greek New Testament …etc.. All bible quotes are from King James Version bible, unless mentioned otherwise.

---------------------------------------